# மேக ஸ்தம்பம்

1963ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 28ம் நாளன்று, சூரியன் மறைவதற்கு சிறிது முன்பு , கவர்ச்சி மிகுந்த அழகான ஒரு மர்ம மேகம் வட பாகத்தில் அரிசோனா முழுவதும் காணப்பட்டது.' விஞ்ஞானம் ' என்னும் பத்திரிக்கையின் 1963 ம்

ஆண்டு ஏப்ரல் 19ம் தேதியின் வெளியீடும் , லைப் பத்திரிக்கையின் 1963 ம் ஆண்டு மே 17ம் தேதியில் வெளியீடும் இதன் புகைப்படத்தை பிரசுரித்து இந்த விநோதமான காட்சியைக் குறித்து ஒரு விசாரணை அறிவிப்பையும் வெளியிட்டன. ('விஞ்ஞானம் ' பத்திரிக்கை இதை மேல் அட்டையில் வெளியிட்டிருந்தது) . இதில் ஏற்பட்ட சிரத்தையின் காரணம் என்னவெனில் இந்த மாபெரும் மேகம், மேகம் உண்டாவதற்கு அவசியமான நீர்த்துளிகள் இருக்க முடியாத உயரத்தில் நீலவானத்தில் தொங்கிக் கொண்டிருந்தது. விஞ்ஞான ரீதியான ஆய்வுகள் எதுவும் இதற்கு நியாயமான காரணத்தைக் கூற இயலவில்லை. ஆனால் உலகம் அறியாத ஒரு காரியம் என்னவெனில் ,

1962ம் ஆண்டு டிசம்பர் 22 ம் நாளன்று , இந்த மேகம் தோன்றுவதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பே , சகோ. பிரன்ஹாமுக்கு ஒரு தரிசனம் உண்டானது. இந்த தரிசனத்தைக் குறித்து அவர் ஜெபர்ஸன் வில்லிலிருந்த அவருடைய சபையோருக்கு அறிவித்தார்.

1963ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 28 ம் நாளன்று இந்த தரிசனத்தில் காணப்பட்ட சம்பவங்கள் சடுதியாக நிறைவேறின. கூர்நுனிக் கோபுர

வடிவில் ஏழு தூதர்கள் தோன்றி, அந்த விநோதமான மேகம் வடிவில் உண்டாக காரணமாயிருந்தனர். இதே தூதர்கள் , டூசானைச் சுற்றியிருந்த மலைகளில் வேட்டையாடிக் கொண்டிருந்த போது அவரை சந்தித்து, ஏழு முத்திரைகளின் இரகசியத்தை பிரசங்கிக்கும்படி கட்டளையிட்டனர்.

63-11-10Eஉங்களிலிருக்கிறவர்

நான் இங்கிருந்து அரிசோனவுக்குச் செல்லப் புறப்பட்டபோது தூதர்களின் கூட்டத்தின் தரிசனத்தை நான் கண்டது நினைவிருக்கிறதா?

சபையார் ஆமென் என்று கூறுகின்றனர் ஜயன்மீர் இதுவா சமயம் ? என்று செய்தி ஞாபகமிருக்கிறதா ? ஆமென் அது ஞாபகத்தில் உள்ளதா? கவனியுங்கள். அங்கு ஒரே ஒரு பெருத்த இடிமுழக்கம் தான் உண்டானது.

ஆனால் ஏழு தேவ தூதர்கள் தோன்றினர் அது சரியா ஆமென் ஒரு இடிமுழக்கம்.

ஏழு தூதர்கள் தோன்றினர்கள்.

ஏழாவது முத்திரை